# கிளி/திருவையாறு மகா வித்தியாலயம்
## முதலாம் தவணைப் பரீட்சை– 2020
## கர்நாடக சங்கீதம்

தரம் - 08 நேரம் :- 2 மணித்தியாலங்கள்

### பகுதி – 1

**பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

01. பின்வருவனவற்றுள் மெல்லிசைப் பாடல்?
    1. பச்சைக் குழந்தையடி
    2. கல்வித்தெய்வம்
    3. மண்ணை நம்பி
    4. மேற்கூறிய யாவும்

02. ஸ்வர சஞ்சாரம் ஒன்றை ஆக்கம் செய்யும் போது விருத்தியாகும் திறன்?
    1. பேசும் திறன்
    2. பாடும் திறன்
    3. ஆக்கத்திறன்
    4. ஆடும் திறன்

03. மேல் ஸ்தாயி வரிசைகள் பாடப்படும் இராகம்?
    1. கல்யாணி
    2. மோகனம்
    3. சங்கராபரணம்
    4. மாயாமாளவகௌளை

04. ஆதி தாளத்தின் மொத்த அட்சரங்கள்?
    1. 10
    2. 08
    3. 06
    4. 04

05. அங்க முடிவைக் காட்டும் குறியீடு?
    1. /
    2. //
    3. 0
    4. =

06. ஸஸ ரிரி கக..... என்ற வரிசையானது?
    1. மேல் ஸ்தாயி வரிசை
    2. ஜண்டை வரிசை
    3. தாட்டு வரிசை
    4. ஸ்வர வரிசை

07. சதுஸ்ரஜாதி ரூபக தாளத்தின் அங்க அடையாளம்?
    1. 100
    2. 01
    3. 1100
    4. 101

08. ஒரு அலங்காரத்தை முதலாம் காலத்தில் பாடும் போது எடுத்துக் கொள்ளும் அட்சங்களின் எண்ணிக்கை?

1. 10 2. 05 3. 15 4. 08

09. கண நாதா........... என்ற சஞ்சாரி ஓம் அமைந்த இராகம்?

1. மிலஹரி
2. மலஹரி
3. ஆரபி
4. கல்யாணி

10. திரியாங்கங்களின் எண்ணிக்கையில் மாற்றமடையும் அங்கம்?

1. துருதம்
2. லகு
3. அனுதுருதம்
4. தாளம்

(20 புள்ளிகள்)

**1) பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளிகளை நிரப்புக.**

**(சப்த, ஸப, கோமள, சங்கராபரணம், புரந்தரதாஸர், தீவிர)**

01. அப்பியாச வரிசைகளை ......................................................................................இயற்றினார்.
02. 29 ஆவது மேளகர்த்தா இராகம் ........................................................................ஆகும்.
03. சுருதியில் குறைந்த ஸ்வரம் ...........................................................................ஸ்வரமாகும்.
04. பிரக்ருதி ஸ்வரங்களாவன .................................................................................ஆகும்.
05. ஏழு ஸ்வரங்களையும் .....................................................................ஸ்வரம் எனப்படும்.

($5\times2 = 10$ புள்ளிகள்)

**2) சரியாயின் √ எனவும் பிழையாயின் × எனவும் அடையாளமிடுக.**

01. 15 ஆவது மேள கர்த்தா இராகம் சங்கராபரணமாகும். (   )
02. விக்ருதி ஸ்வரங்கள் 5 ஆகும். (   )
03. அந்தர காந்தாரம் தீவிர ஸ்வரமாகும். (   )
04. 12 ஸ்வரஸ்தானங்களில் மூன்றாவது ஸ்வரம் பஞ்சமம் ஆகும். (   )
05. அப்பியாச வரிசைகள் பாடப்படும் இராகம் மாயாமாளவகௌளவை. (   )

($5\times2 = 10$ புள்ளிகள்)

# பகுதி–II

## விரும்பிய நான்கு வினாக்களுக்கு விடை தருக.

01. பின்வருவனவற்றை விளக்குக.‘

a. பிரக்ருதி ஸ்வரம்

b. விக்ருதி ஸ்வரம்

c. லயம்

(3x5=15 புள்ளிகள்)

02.

a. ஸப்தஸ்வரங்களிலிருந்து 12 ஸ்வரஸ்தானங்கள் உருவாகிய விதத்தை விளக்குக.

b. 12 ஸ்வரஸ்தானங்களை அட்டவணைப்படுத்துக.

(7+8=15 புள்ளிகள்)

03. நாட்டார் பாடலின் கலாசாரப் பின்னணி பற்றி விளக்குக.

(15 புள்ளிகள்)

04. நீர் கற்ற ரூபக தாள அலங்காரத்தை இராகம், தாளம், இயற்றியவர், அங்க அடையாளம், மொத்த அட்சரம் என்பவற்றுடன் கிரமமாக எழுதுக?

(15 புள்ளிகள்)

05.

a. கோமள ஸ்வரம் என்பது யாது? உதாரணத்துடன் விளக்குக.

b. தீவிர ஸ்வரம் என்பது யாது? உதாரணத்துடன் விளக்குக.

(15 புள்ளிகள்)